**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **STC 1214 of 2022** |
| Deposition of witness | : | **DW - 2** |
| Name | : | அழகர் |
| Father Name | : | பழனி |
| Age | : | **50** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.07.2026.

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. எனக்கு ஸ்ரீவைகுண்டம் ஸ்டேட் பேங்க் கிளையில் ஒரு கணக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கிற்கு உரியதானது தான் இந்த வழக்கின் காசோலை என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கு காசோலையில் எனது இன்சியல் தவறாக உள்ளது என்பதை வங்கிக்கு ஏதேனும் கடிதத்தின் மூலமாக தெரியப்படுத்தி உள்ளேனா என்றால் இல்லை. நான் ஏற்கனவே புகார் கொடுத்துள்ளதாக சொல்லும் நிலையில் புகார்தாரர் தியாகசெல்வன் மீது புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கிற்கு பின்னிட்டாவது குமார் தியாகசெல்வன் மூலம் இந்த புகாரை தாக்கல் செய்துள்ளார் என்று காவல் நிலையத்தில் எனது தரப்பில் ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் ரூபாய் 15,000 புகார்தாரருக்கு செலுத்தி உள்ளேன் என்று சொன்னால் நீதிபதி சொன்னதின் அடிப்படையில் அவரது பேச்சுக்கு மதிப்பு கொடுத்து செலுத்தினேன்.

2. நான் சொல்வது போல் குமாருக்கும் தியாக செல்வனுக்கும் எந்த ஒரு தொடர்பும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. குமாருக்கு கொடுத்த காசோலையை தியாகசெல்வன் மூலம் அவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தியாக செல்வனிடம் பணம் பெற்றுக் கொண்டுதான் இந்த காசோலையை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.09 14:39:28 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்